ஞாயிறுதோறும்
தினமணி கதிர்
"இளமை! புதுமை! இனிமை!"

தினமணி
சனிக்கிழமை, 11 மே 2024

ஸ்ரீ வீராஸ் கிரியேஷன்ஸ்
பல ஜவுளிக் கடை முதலாளிகளை உருவாக்கும் ஒரே ஸ்தாபனம்
மொத்த விலை ஜவுளி கடை
சில்க்ஸ், டெக்ஸ்டைல்ஸ் & ரெடிமேட் கலெக்ஷன்ஸ்
51-52/1, எம்.சி.ரோடு, வண்ணாரப்பேட்டை, சென்னை -21. போன்: 2590 1771 - 74
www.facebook.com/sriveerascreations www.sriveeras.com

வெளிநாடுகளிலும் கம்பன் கழக விழாக்கள்

புதுவை ஆளுநர் சி.பி.ராதாகிருஷ்ணன் விருப்பம்

புதுச்சேரி கம்பன் கலையரங்கில் வெள்ளிக்கிழமை தொடங்கிய கம்பன் விழாவில் கம்பராமாயணம் புத்தகத்தை வெளியிட்ட துணைநிலை ஆளுநர் (பொ) சி.பி.ராதாகிருஷ்ணன். உடன் புதுவை முதல்வர் என்.ரங்கசாமி, உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி வெ.ராமசுப்பிரமணியன், சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம், அமைச்சர் சாய் ஜெ.சரவணன்குமார், அரசு கொறடா ஏகேடி.ஆறுமுகம், அனிபால் கென்னடி எம்எல்ஏ, கம்பன் கழகத் தலைவர் சு.செல்வகணபதி எம்.பி., செயலர் வி.பி.சிவக்கொழுந்து உள்ளிட்டோர்.

புதுச்சேரி, மே 10: வெளிநாடுகளிலும் கம்பன் கழக விழாக்கள் நடத்தப்பட வேண்டும் என்று புதுவை துணைநிலை ஆளுநர் (பொ) சி.பி.ராதாகிருஷ்ணன் கூறினார்.

புதுச்சேரி கம்பன் கழகத்தின் 57–ஆவது ஆண்டு கம்பன் விழாவை கம்பன் கலையரங்கில் வெள்ளிக்கிழமை தொடங்கிவைத்து அவர் பேசியதாவது:

கம்பரைப் போல வேறு எந்தக் கவியும் ராமரை தெய்வநிலைக்கு உயர்த்திப் பாடியதில்லை. படகோட்டியான குகனை, ராமருடன் சகோதரராக்கி சமூக ஒற்றுமையை எடுத்துரைத்துள்ளார். எந்த ஜாதியும் பிற ஜாதியைவிட உயர்ந்ததுமில்லை, தாழ்ந்ததுமில்லை. அனைவரும் சமூக வளர்ச்சிக்கான பங்களிப்பை ஒவ்வொரு விதத்திலும் வழங்கி வருகிறார்கள் என்பதே உண்மை. அதனடிப்படையில்தான், கம்பர் அனைவரையும் ஒருங்கிணைத்துப் பாடுகிறார்.

தனித்தனியான முத்துகள் மாலையாகி சிறப்பை ஏற்படுத்துவதைப் போல தேசியத்தை தமிழகத்தின் மூலம் ஒருங்கிணைத்து ராம காவியத்தை கம்பர் பாடியுள்ளார்.

நமது பாரதத்தை ஒருங்கிணைத்து பாடியதில் கம்பரின் பங்களிப்பு முக்கியமானது. அத்தகைய சிறப்புமிக்க செம்மொழியாம் தமிழை நமது பிரதமரும் மூத்த மொழி எனப் போற்றி வருகிறார். ஆனால், தேசியம் பேசுவது தமிழுக்கு விரோதம் என்ற மனநிலை தமிழகத்தில் உள்ளது. தாய்த் தமிழ் மீதான காதலால் மாற்று மொழி மீது வெறுப்பாகிவிடக் கூடாது. நமது நலனைவிட தாய்நாட்டு நலனே முக்கியம். தாய்மொழி வேர் போன்றது; அதை நாம் மறந்துவிடக் கூடாது.

தமிழின் பெருமையை தமிழகத்துக்குள் மட்டும் பேசி வருவது முக்கியமல்ல. உலகமெங்கும் பேசப்படவேண்டும். அதற்கு கம்பன் கழக விழாக்களை வெளிநாடுகளிலும் நடத்துவது அவசியம் என்றார் சி.பி.ராதாகிருஷ்ணன்.

விழாவுக்கு உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி வெ.ராமசுப்பிரமணியன் தலைமை வகித்தார். கம்பன் கழகப் புரவலரான புதுவை முதல்வர் என்.ரங்கசாமி வரவேற்றார்.

முன்னதாக, கம்பன் திருவுருவச் சிலைக்கு முதல்வர் தலைமையில் மாலை அணிவிக்கப்பட்டது. புதுவை சட்டப்பேரவைத் தலைவர் ஆர்.செல்வம், அமைச்சர் சாய் ஜெ.சரவணன்குமார், கம்பன் கழகத் தலைவர் சு.செல்வகணபதி எம்.பி., அரசு கொறடா ஏகேடி. ஆறுமுகம், அனிபால் கென்னடி எம்எல்ஏ, கம்பன் கழகச் செயலர் வி.பி. சிவக்கொழுந்து மற்றும் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ், நியமன எம்.எல்.ஏ.க்கள் அசோக்பாபு, ராமலிங்கம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தமிழை சிரஞ்சீவி மொழியாக்கியவர் கம்பர்!

உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி வெ.ராமசுப்பிரமணியன்

புதுச்சேரி, மே 10: 'தமிழை சிரஞ்சீவி மொழியாக்கியவர் கம்பர்' என உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி வெ.ராமசுப்பிரமணியன் கூறினார்.

புதுச்சேரி கம்பன் கலையரங்கில் வெள்ளிக்கிழமை காலை தொடங்கிய 57–ஆவது கம்பன் விழாவுக்கு தலைமை வகித்து அவர் பேசியதாவது:

கம்பராமாயணத்தை கி.பி.889–ஆம் ஆண்டு கம்பர் அரங்கேற்றியுள்ளார். அவரது பெருமையை மகாகவி பாரதியார், சுதந்திரப் போராட்ட வீரர் வ.வே.சு. ஐயர் ஆகியோர் எடுத்துரைத்துள்ளனர்.

கல்வியில் சிறந்த தமிழ்நாடு, புகழ் கம்பன் பிறந்த தமிழ்நாடு என தமிழகத்தின் பெருமை மிக்கவராக கம்பரை பாரதியார் எடுத்துக்காட்டியுள்ளார். சுதந்திரப் போராட்டக் காலத்தில் சிறையில் இருந்த வட மாநிலத் தலைவர்கள் பகவத் கீதைக்கு உரை எழுதுவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஆனால், வ.வே.சு.ஐயரோ சிறையிலிருந்த காலத்தில் கம்பராமாயணத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். அந்த நூல் 29 ஆண்டுகள் கழித்து தில்லி தமிழ்ச் சங்கத்தால் பதிப்பிக்கப்பட்டது.

தமிழ் மொழியையும், தமிழ்நாட்டையும் கம்பரைப் போல அவருக்கு முன்பு வேறு எந்தப் புலவரும் போற்றியதில்லை. கம்பராமாயணத்தால்தான் தமிழ், தமிழ்நாடு என்பதை அதிகளவில் கம்பர் எடுத்தாண்டுள்ளார்.

தமிழை அகத்தியருக்கு சிவன் அருளியதாகக் கூறுகிறார் கம்பர். அதன்படி, தமிழை இறைவன் அருளிய மொழி என்பதுடன், என்றும் சிரஞ்சீவியாக தமிழ் வாழ்வதையும் அவர் எடுத்துக்காட்டியுள்ளார் என்றார் முன்னாள் நீதிபதி வெ.ராமசுப்பிரமணியன்.

விழாவில் புதுச்சேரி கம்பன் கழகத்தின் சார்பில் 'கம்பராமாயணம்' நூலை துணைநிலை ஆளுநர் (பொ) சி.பி.ராதாகிருஷ்ணன் வெளியிட, முதல்வர் என். ரங்கசாமி பெற்றுக் கொண்டார்.

கம்பன் விழா மலரை பேரவைத் தலைவர் ஆர்.செல்வம் வெளியிட்டு, தமிழ்ப் புலவர்களுக்கான அறக்கட்டளை விருதுகளையும் வழங்கினார்.

தொடர்ந்து, கம்பராமாயணம் குறித்த புதிய நூல்களும் வெளியிடப்பட்டன. கம்பன் விழாப் போட்டிகளில் வென்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மாலையில் எழிலுரை, தனியுரை மற்றும் மகளிர் பேச்சாளர்கள் பங்கேற்ற கருத்தரங்கு ஆகியவை நடைபெற்றன.

யானைகள் வழித்தட அறிக்கை: வனத் துறை இணையத்தில் வெளியீடு

சென்னை, மே 10: வனத் துறை சார்பில் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு:

தமிழ்நாட்டுக்கான யானைகள் வழித்தடத் ஒருங்கிணைப்புத் திட்டத்துக்கான முதல் வரைவு அறிக்கை தயாரிக்கப்பட்டு, வனத் துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்த வரைவு குறித்து பொதுமக்கள் மற்றும் ஆய்வாளர்களிடமிருந்து பெறப்படும் கருத்துகள் மாவட்ட வாரியாக தொகுக்கப்பட்டு வருகின்றன.

அதன் பின்னர், யானைகள் இருப்பிட பகுதிகளில் இருக்கும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் மாவட்ட ஆட்சியர் மற்றும் வன அலுவலர் முன்னிலையில் கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்படும். இந்தக் கூட்டத்தில் பொதுமக்களின் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளின் படி விடுபட்ட யானைகள் வழிடங்களை இணைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அதைத் தொடர்ந்து இறுதி யானைகள் வழித்தட ஒருங்கிணைப்புதிட்டம்தயாரிக்கப்பட்டு தமிழக அரசின் பரிசீலனைக்காக சமர்ப்பிக்கப்படும்.

இந்த இறுதி வரைவு அறிக்கையில் மனித மற்றும் வன உயிரினங்கள் இடையான மோதல்களை தவிர்க்கவும், உள்ளூர் மக்களின் பாதுகாப்பை உறுதிபடுத்தவும் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளும் திட்டமிடப்படும்.

எனவே யானைகள் வழித்தட ஒருங்கிணைப்புத் திட்ட வரைவு குறித்த தவறான தகவல்களை பொதுமக்கள் நம்ப வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ள மேலாண்மை: தமிழக அதிகாரிகள் ஜப்பான் பயணம்

சென்னை, மே 10: சென்னையில் வெள்ள மேலாண்மை குறித்த பெருந்திட்டத்தை உருவாக்க நீர்வளத் துறையைச் சேர்ந்த 4 அதிகாரிகள் ஜப்பான் நாட்டின் டோக்கியோவுக்குச் செல்லவுள்ளனர்.

நீர்வளத் துறையைச் சேர்ந்த செயற்பொறியாளர் ஜி.ஆர். ராதாகிருஷ்ணன், ஆர்.அருண்மொழி, பெருநகர சென்னை மாநகராட்சி தலைமைப் பொறியாளர் எஸ்.ராஜேந்திரன், கண்காணிப்புப் பொறியாளர் எஸ். பாஸ்கரன் ஆகியோர் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

மே 11–ஆம் தேதியில் இருந்து மே 18–ஆம் தேதி வரை அவர்கள் டோக்கியோ நகரத்தில் இருப்பர் என்று அரசின் உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

FEDERAL BANK
YOUR PERFECT BANKING PARTNER

கிளை : LCRD / கோயமுத்தூர் பிரிவு.
எண்.21, முதல் தளம், M L லுண்ட் காம்ப்ளக்ஸ், வெரைட்டி ஹால் ரோடு, கோயமுத்தூர் – 641001. போன் : 0422–2302992, 2399740
இ–மெயில் : cbelcrd@federalbank.co.in

விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு.

தி பெடரல் பேங்க் லிட்–டின் (பாதுகாக்கப்பட்ட கடனீந்தவர்) அதிகாரம் பெற்ற அதிகாரி அவர்கள், மேற்படி வங்கிக்கு வரவேண்டிய 'கேஷ் கிரெடிட்' கணக்கிற்கான **(கணக்கு எண்.18745500000518) 28.05.2024** தேதி வரையான தொகை **ரூ.61,18,901.05 (ரூபாய் அறுபத்து ஒரு லட்சத்து பதினெட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஒன்று மற்றும் பைசா ஐந்து மட்டும்)** மற்றும் பின் வட்டி, பிற செலவுகளுடனான தொகையை **1) திரு.R.மூர்த்தி,** த/பெ.திரு.K.ராஜா கவுண்டர், எண்.624, கோவை மெயின் ரோடு, நம்பியூர், ஈரோடு, தமிழ்நாடு–638 458, **M/s.ஸ்ரீ பாலாஜி டெக்ஸ்டைல் பிராஸசர்–ன் ஏக உரிமையாளர்,** எண்.530, கோயமுத்தூர் மெயின் ரோடு, நம்பியூர், ஈரோடு–638 458, **2) திருமதி.M.கலைச்செல்வி,** க/பெ.திரு.R.மூர்த்தி, எண்.624, கோவை மெயின் ரோடு, நம்பியூர், ஈரோடு, தமிழ்நாடு–638 458, **3) திரு.S.சுப்ரமணியம்,** த/பெ.திரு.சாமியப்பன், எண்.25, அண்ணா வீதி, எலத்தூர் செட்டிபாளையம் அஞ்சல், நம்பியூர்–638 458 என்பவர்களிடமிருந்து வசூலிக்கும் பொருட்டு, கடன் வழங்கிய வங்கிக்குப் பிணையப்படுத்தப்பட்ட/அடுவைக்கப்பட்ட சுவாதீனம் செய்து கொண்ட கீழ்க்கண்ட அசையாச் சொத்தினை **28.05.2024** தேதியன்று விற்பனை செய்யவுள்ளார் என்பதை குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் உத்தரவாதமளித்தவர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பின் மூலம் தெரியப்படுத்தப்படுகிறது. இந்த சொத்துக்கள் **'எங்குள்ளதோ உள்ளபடி', 'என்ன உள்ளதோ உள்ளபடி' மற்றும் 'எப்படியுள்ளதோ உள்ள நிலையில்'** விற்கப்படும்.

ஒவ்வொரு குவியலுக்கும்/சொத்திற்கான குறைந்தபட்ச நிர்ணயிக்கப்பட்ட விலை மற்றும் முன் வைப்புத் தொகை **(EMD)** விபரம் கீழ்க் குறிப்பிட்டுள்ளபடியாகும்.

குவியல்–1 : குறைந்தபட்ச நிர்ணய விலை : ரூ.9,50,000/– மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.95,000/–.
குவியல்–2 : குறைந்தபட்ச நிர்ணய விலை : ரூ.9,50,000/– மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.95,000/–.
குவியல்–3 : குறைந்தபட்ச நிர்ணய விலை : ரூ.8,00,000/– மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.80,000/–.
குவியல்–4 : குறைந்தபட்ச நிர்ணய விலை : ரூ.8,00,000/– மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.80,000/–.
குவியல்–5 : குறைந்தபட்ச நிர்ணய விலை : ரூ.8,00,000/– மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.80,000/–.
குவியல்–6 : குறைந்தபட்ச நிர்ணய விலை : ரூ.8,00,000/– மற்றும் முன்வைப்புத் தொகை : ரூ.80,000/–.

அசையாச் சொத்தின் விபரம்

இனம் எண்.1 (குவியல்–1) : தமிழ்நாடு மாநிலம், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், நம்பியூர் சார் பதிவு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் தாலூகா, நம்பியூர் கிராமம் க.ச.எண்.179/4ல் அடங்கியதும் அதன் பகுதியுமான "அழகாபுரி நகர் விரிவாக்கம் –1" என்ற பெயரிடப்பட்ட மனை குடியிருப்புப் பிரிவில் லேஅவுட் ரோடுகள் மற்றும் மாமூல் ரோடுகள் வழி சொத்தைச் சென்றடையும் உரிமையுடன் பிற அனைத்து அபிவிருத்திகள் சேர்ந்த சொத்து. மனை எண்.16ன் கிழபுறப் பகுதியில் 1024.44 சதுர அடி விஸ்தீரணத்தில் உள்ளது. **இதன் எல்லைகள் :** 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, பிறரது சொத்துக்கு வடக்கு, மனை எண்.16ன் மேற்புறப் பகுதிக்குக் கிழக்கு, சுப்ரமணியத்துக்குச் சொந்தமான நிலத்துக்கு மேற்கு. இதனுள் தென்வடல் மேல்புறம் 55 அடி, தென்வடல் கிழபுறம் 55.75 அடி, கிழமேல் வடபுறம் 20.5 அடி மற்றும் கிழமேல் தென்புறம் 16.50 அடி (சொத்தின் மேல் விவரங்கள் திரு.R.மூர்த்தி மற்றும் திரு.S.சுப்ரமணியம் பெயரில் நம்பியூர் சார் பதிவகத்தில் பதியப்பட்ட விற்பனைப் பத்திர ஆவண எண்.1377/2011 நாள் 21.03.2011ல் விரிவாக உள்ளன).

இனம் எண்.2 (குவியல்–2) : தமிழ்நாடு மாநிலம், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், நம்பியூர் சார் பதிவு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் தாலூகா, நம்பியூர் கிராமம் க.ச.எண்.179/4ல் அடங்கியதும் அதன் பகுதியுமான "அழகாபுரி நகர் விரிவாக்கம் –1" என்ற பெயரிடப்பட்ட மனை குடியிருப்புப் பிரிவில் லேஅவுட் ரோடுகள் மற்றும் மாமூல் ரோடுகள் வழி சொத்தைச் சென்றடையும் உரிமையுடன் பிற அனைத்து அபிவிருத்திகள் சேர்ந்த சொத்து. மனை எண்.16ன் மேற்குப்புறப் பகுதியில் உள்ள 1017.50 சதுர அடி விஸ்தீரணத்தில் உள்ளது. **இதன் எல்லைகள் :** 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, பிறரது சொத்துக்கு வடக்கு, மனை எண்.17க்குக் கிழக்கு, மனை எண்.16ன் கிழப்புறப் பகுதிக்கு மேற்கு. இதனுள் தென்வடல் இருபுறமும் 55 அடி, கிழமேல் வடபுறம் 20.50 அடி, கிழமேல் தென்புறம் 16.50 அடி. (சொத்தின் மேல்விவரங்கள் திரு.R.மூர்த்தி மற்றும் திரு.S.சுப்ரமணியம் பெயரில் நம்பியூர் சார் பதிவகத்தில் 21.03.2011 அன்று பதியப்பட்ட விற்பனைப் பத்திர ஆவண எண்.1376/2011ல் விரிவாக உள்ளன).

இனம் எண்.3 (குவியல்–3) : தமிழ்நாடு மாநிலம், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், நம்பியூர் சார் பதிவு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் தாலூகா, நம்பியூர் கிராமம் க.ச.எண்.179/4ல் அடங்கியதும் அதன் பகுதியுமான "அழகாபுரி நகர் விரிவாக்கம் –1" என்ற பெயரிடப்பட்ட மனை குடியிருப்புப் பிரிவில் லேஅவுட் ரோடுகள் மற்றும் மாமூல் ரோடுகள் வழி சொத்தைச் சென்றடையும் உரிமையுடன் பிற அனைத்து அபிவிருத்திகள் சேர்ந்த சொத்து. மனை எண்.17ன் கிழப்புறப் பகுதியில் 880 சதுர அடி விஸ்தீரணத்தில் உள்ளது. **இச்சொத்தின் எல்லைகள் :** 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, பிறரது சொத்துக்கு வடக்கு, மனை எண்.17ன் மேற்புறப் பகுதி நிலத்துக்குக் கிழக்கு, மனை எண்.16க்கு மேற்கு. இதனுள் தென்வடல் இருபுறமும் 55 அடி, கிழமேல் இருபுறமும் 16 அடி ஆக உள்ள நிலம். (சொத்தின் மேல் விவரங்கள் திரு.R.மூர்த்தி மற்றும் திரு.S.சுப்ரமணியம் பெயரில் நம்பியூர் சார் பதிவகத்தில் 21.03.2011 அன்று பதியப்பட்ட விற்பனைப் பத்திர ஆவண எண்.1379/2011ல் விரிவாக உள்ளன).

இனம் எண்.4 (குவியல்–4) : தமிழ்நாடு மாநிலம், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், நம்பியூர் சார் பதிவு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் தாலூகா, நம்பியூர் கிராமம் க.ச.எண்.179/4ல் அடங்கியதும் அதன் பகுதியுமான "அழகாபுரி நகர் விரிவாக்கம் –1" என்ற பெயரிடப்பட்ட மனை குடியிருப்புப் பிரிவில் லேஅவுட் ரோடுகள் மற்றும் மாமூல் ரோடுகள் வழி சொத்தைச் சென்றடையும் உரிமையுடன் பிற அனைத்து அபிவிருத்திகள் சேர்ந்த சொத்து. மனை எண்.17ன் மேற்புறப் பகுதியில் 880 சதுர அடி விஸ்தீரணத்தில் உள்ளது. **இச்சொத்தின் எல்லைகள் :** 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, பிறரது சொத்துக்கு வடக்கு, மனை எண்.18க்குக் கிழக்கு, மனை எண்.17ன் கிழபுறப் பகுதிக்கு மேற்கு. இதனுள் தென்வடல் இருபுறமும் 55 அடி, கிழமேல் இருபுறமும் 16 அடி ஆக உள்ள நிலம். (சொத்தின் மேல்விவரங்கள் திரு.R.மூர்த்தி மற்றும் திரு.S.சுப்ரமணியம் பெயரில் நம்பியூர் சார் பதிவகத்தில் 21.03.2011 அன்று பதியப்பட்ட விற்பனைப் பத்திர ஆவண எண்.1378/2011ல் விரிவாக உள்ளன).

இனம் எண்.5 (குவியல்–5) : தமிழ்நாடு மாநிலம், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், நம்பியூர் சார் பதிவு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் தாலூகா, நம்பியூர் கிராமம் க.ச.எண்.179/4ல் அடங்கியதும் அதன் பகுதியுமான "அழகாபுரி நகர் விரிவாக்கம் –1" என்ற பெயரிடப்பட்ட மனை குடியிருப்புப் பிரிவில் லேஅவுட் ரோடுகள் மற்றும் மாமூல் ரோடுகள் வழி சொத்தைச் சென்றடையும் உரிமையுடன் பிற அனைத்து அபிவிருத்திகள் சேர்ந்த சொத்து. மனை எண்.18ன் கிழபுறப் பகுதியில் 880 சதுர அடி விஸ்தீரணத்தில் உள்ளது. **இச்சொத்தின் எல்லைகள் :** 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, பிறரது சொத்துக்கு வடக்கு, மனை எண்.18ன் மேற்புறப் பகுதிக்குக் கிழக்கு, மனை எண்.17க்கு மேற்கு. இதனுள் தென்வடல் இருபுறமும் 55 அடி, கிழமேல் இருபுறமும் 16 அடி. (சொத்தின் மேல்விவரங்கள் திரு.R.மூர்த்தி மற்றும் திரு.S.சுப்ரமணியம் பெயரில் 21.03.2011 அன்று நம்பியூர் சார் பதிவு அலுவலகத்தில் பதியப்பட்ட விற்பனைப் பத்திர ஆவண எண்.1380/2011ல் விரிவாக உள்ளன).

இனம் எண்.6 (குவியல்–6) : தமிழ்நாடு மாநிலம், ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் பதிவு மாவட்டம், நம்பியூர் சார் பதிவு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் தாலூகா, நம்பியூர் கிராமம் க.ச.எண்.179/4ல் அடங்கியதும் அதன் பகுதியுமான "அழகாபுரி நகர் விரிவாக்கம் –1" என்ற பெயரிடப்பட்ட மனை குடியிருப்புப் பிரிவில் லேஅவுட் ரோடுகள் மற்றும் மாமூல் ரோடுகள் வழி சொத்தைச் சென்றடையும் உரிமையுடன் பிற அனைத்து அபிவிருத்திகள் சேர்ந்த சொத்து. மனை எண்.18ன் மேற்புறப் பகுதியில் 880 சதுர அடி விஸ்தீரணத்தில் உள்ளது. **இச்சொத்தின் எல்லைகள் :** 23 அடி அகல கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, பிறரது சொத்துக்கு வடக்கு, மனை எண்.19க்குக் கிழக்கு, மனை எண்.18ன் கிழபுறப்பகுதிக்கு மேற்கு. இதனுள் தென்வடல் இருபுறமும் 55 அடி, கிழமேல் இருபுறமும் 16 அடி ஆக உள்ள நிலம். (சொத்தின் மேல்விவரங்கள் திரு.R.மூர்த்தி மற்றும் திரு.S.சுப்ரமணியம் பெயரில் 21.03.2011 அன்று நம்பியூர் சார்பதிவகத்தில் பதியப்பட்ட விற்பனைப் பத்திர ஆவண எண். 1381/2011ல் விரிவாக உள்ளன).

விற்பனையின் விரிவான நிபந்தனை விபரங்களுக்கு, பெடரல் பேங்கின் இணையதளத்திலுள்ள (https://www.federalbank.co.in/web/guest/tender-notices) லிங்க்கினைப் பார்வையிடவும்

ஒப்பம்
(அதிகாரம் பெற்ற அதிகாரி –சர்பாஸி சட்டத்தின் கீழ்)
தி பெடரல் பேங்க் லிட்.

தேதி : 07.05.2024
இடம் : கோயமுத்தூர்

OMKARA ASSETS RECONSTRUCTION Pvt. Ltd.

ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட்
CIN : U67100TZ2014PTC020363
பெருநிறுவன அலுவலகம் : கோஹினூர் ஸ்கொயர், 47 வது தளம், N.C. கேல்கர் மார்க், R.G. கட்காரி சௌக், தாதர் (மேற்கு) மும்பை - 400028. **தொ.பே. எண் :** +91 75583 92736 **மின்னஞ்சல் :** s.banerjee@omkaraarc.com

பிற்சேர்க்கை - IV-A (பார்க்க - விதி 8(6)க்கான விதி விலக்கு) அசையா சொத்து விற்பனை செய்யப்படுவதற்கான மின்னணு ஏல விற்பனை பொது அறிவிப்பு
பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 ("சர்ஃபாசி சட்டம்") மற்றும் பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) - உடன் படிக்க - 9(1) க்கான விதி விலக்கு - ன் கீழ் அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொது மக்களுக்கும் குறிப்பாக கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(களுக்கும்) அறிவிக்கப்படுவது யாதெனில், இதன் கீழ் விவரிக்கப்பட்ட ஜாமீன் பெற்று கடனளித்தவருக்கு அடமானம் / கடன் பொறுப்பு ஏற்படுத்தப்பட்ட அசையா சொத்து, பஞ்சாப் நேஷனல் வங்கியின் அதிகாரப்பூர்வ அலுவலரால் 13.07.2015 அன்று **சுவாதீனம் எடுக்கப்பட்டுள்ளது.** மேலும், **ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட் (OARPL)** ஆனது, 07.06.2018 தேதிய பணி ஒப்படைவு ஒப்பந்தத்தின் கீழ் பஞ்சாப் நேஷனல் வங்கி (பணி ஒப்படைப்பவர்) யிடமிருந்து இதன் கீழ்க்கண்ட ஜாமீன் சொத்துக்களுடன் சேர்த்து இதன் கீழ்க்கண்ட கணக்குகளில் உள்ள மொத்த நிலுவைத்தொகைகளையும் அடைந்துள்ளது. அதனால், OARPL ஆனது பணி ஒப்படைப்பவரின் நிலையினை பெற்று, நிலுவைத்தொகைகளை வசூலிக்கவும், பிணைக்காப்பு அமலாக்கம் செய்யவும் அதிகாரம் பெற்றுள்ளது. OARPL ன் அதிகாரப்பூர்வ அலுவலர் நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக, இதன் கீழ்க்குறிப்பிட்ட ஜாமீன் சொத்துக்களை விற்பனை செய்ய இதன் மூலம் உத்தேசித்துள்ளார்., அதனால் ஜாமீன் சொத்துக்களை வாங்குவதற்கான விலைப்புள்ளிகள் / விலைகோரல்களை மூடி முத்திரையிட்ட உறையிலிட்டு வரவேற்கப்படுகின்றன. இதன் கீழ்க்கண்ட அந்தந்த காலத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஜாமீன் பெற்று கடனளித்த OARPL க்கு அந்தந்த கடன்தாரர் மற்றும் கூட்டு கடன்தாரர்(களிடமிருந்து) நிலுவையாக உள்ள தொகைகளை வசூலிப்பதற்காக, இதில் குறிப்பிடப்பட்டுள்ள அடையாள சுவாதீனத்திலுள்ள சொத்துக்கள் சர்ஃபாசி சட்டம் 13(2) மற்றும் (4) ன் கீழான ஏற்பாடுகளின் கீழான அதிகாரத்தையும், உரிமைகளையும் செயலுறுத்தி "இருக்கின்ற இடத்தில்" "இருக்கின்ற நிலையில்" மற்றும் "இருக்கின்றவற்றுடன்" என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படும். கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள், நிலுவைத்தொகைகளை, பிரிவு 13(2) ன் கீழ் கோரிக்கை அறிவிப்பு அனுப்பிய தேதி, அடிப்படை விலை, விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை, டேவணித்தொகை, ஆய்வு தேதி மற்றும் நேரம் ஆகியன இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் பெயர்	ஜாமீன் சொத்து விபரங்களாவன	சொத்தின் உரிமையாளர்	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் கோரப்பட்ட தொகை	அடிப்படை விலை	விலைப்புள்ளி அதிகரிப்பு தொகை	டேவணித் தொகை	ஆய்வு தேதி & நேரம்
1. MC நிட்டிங் மில்ஸ் (கடன்தாரர்) 2. திரு S பரத் (உரிமையாளர்) 3. திருமதி D தனலட்சுமி (ஜாமீன்தாரர்) 4. திரு C சுப்ரமணியம் (ஜாமீன்தாரர்) 5. திருமதி S கண்ணம்மாள் (ஜாமீன்தாரர்)	தமிழ்நாடு, கோபிசெட்டிபாளையம் தாலுக்கா, கொளப்பலூர் டவுன் பஞ்சாயத்து, கொளப்பலூர் கிராமம், பழைய சர்வே எண். 83/5c, 84/1, 84/6, பழைய பட்டா எண். 477, புதிய பட்டா எண். 47, கதவு எண். 222, 222(1), 224, 226, 230, 232 மைக்கொண்டு, கோபி - தாராபுரம் சாலை, (யுனைட்டி மில்) யுனைட்டி நகரில் உத்தேசமாக 9.14 ஏக்கர் பரப்புடன் கூடிய தொழிற்சாலை இடம் மற்றும் அதில் உள்ள 46268 சதுர அடி உத்தேச கட்டிட பரப்பு கொண்ட கட்டிடம் ஆகியன., **இது உரிமையாளர் திரு. S. பரத், திருமதி. D. தனலட்சுமி ஆகியோருக்கு சொந்தமாக உள்ள சொத்து. (அடையாள சுவாதீனத்தில் உள்ளது)**	திரு. S. பரத், திருமதி. D. தனலட்சுமி	தேதி : 16.04.2015 தொகை : 01.04.2015ம் தேதியின் படி, ரூ. 12,33,50,190.50/- (ரூபாய். பன்னிரண்டு கோடியே முப்பத்து மூன்று இலட்சத்து ஐம்பதாயிரத்து நூற்று தொண்ணூறு மற்றும் பைசா ஐம்பது மட்டும்) வட்டி மற்றும் வட்டி மற்றும் இதர கட்டணங்கள் உட்பட	ரூ. 13,35,00,000/-	ரூ. 5,00,000/-	ரூ. 1,33,50,000/-	அடையாள சுவாதீனத்தில் உள்ளது

கணக்கு எண் : 37644285876, பயனாளி பெயர் : ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிட்., வங்கி பெயர் : ஸ்டேட் பேங்க் ஆஃப் இந்தியா, குர்லா மேற்கு, மும்பை - 400070, **IFSC Code : SBIN0001886**

மின்னணு ஏல தேதி & நேரம் : 31.05.2024 (வெள்ளிக்கிழமை) காலை 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை

விலைப்புள்ளிகள், பங்கேற்பு கடிதம்/KYC ஆவணங்கள்/டேவணித்தொகைக்கான சான்று ஆகியவற்றை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி மற்றும் நேரம் : 29.05.2024 (புதன் கிழமை) மாலை 06.00 மணி வரை.

ஏலத்துக்கான விதிகள் மற்றும் நிபந்தனைகள் : விற்பனைக்கான விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு வலைதளம் **http://omkaraarc.com/auction.php** ல் கொடுக்கப்பட்டுள்ள தொடர்பை தயவு கூர்ந்து பார்வையிடவும்.

ஏலமானது OARPL மூலம் ஆன்லைனில் நடத்தப்படும். DD / பே ஆர்டர் (அசல்) அல்லது NEFT/RTGS மூலம் செலுத்தப்பட்ட டேவணித்தொகையுடன் கூடிய விலைப்புள்ளிகளை (ஆன்லைன் மற்றும் காகித வடிவம்) சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி : **29.05.2024 மாலை 06.00 மணி.** டேவணித்தொகை செலுத்திய விருப்பமுள்ள ஏலதாரர்கள் உள்நுழை அடையாளம் & கடவுச்சொல் ஆகியவற்றை உருவாக்குவதிலும், தரவுகளை பதிவேற்றம் செய்வதிலும், விலைப்புள்ளி சமர்ப்பித்தலிலும், மின்னணு ஏல விலைகோரல் முறைக்கான பயிற்சிக்கும் மின்னணு ஏல சேவைதாரர் **"M/s. C1 India Pvt. Ltd"** யை உதவிக்கான தொலைபேசி எண் : **+91-7291981124/25/26, உதவிக்கான மின்னஞ்சல் முகவரி : support@bankeauctions.com** மற்றும் சொத்து தொடர்பான விசாரணைகளுக்கு **அதிகாரப்பூர்வ அலுவலர், திரு ஷூபோஜித் பானர்ஜி, அலைபேசி எண் : +91 7558392736, மின்னஞ்சல் முகவரி : s.banerjee@omkaraarc.com** ல் அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் தொடர்பு கொள்ளவும். விருப்பமுள்ள ஏலதாரர்கள் திவால் மற்றும் நொடிப்புநிலை சட்டம் 2016 ன் பிரிவு 29A ன் கீழான அறிவிக்கையை சமர்ப்பித்து அதற்கு கட்டுப்பட வேண்டும்., இதனை செய்ய தவறும் பட்சத்தில் விலைப்புள்ளி நிராகரிக்கப்படும்.

பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) & 9(1) ன் கீழ் விற்பனைக்கான சட்டபூர்வ அறிவிப்பு

இவ்வறிவிப்பானது, மேற்சொன்ன கடன் கணக்குக்கான கடன்தாரர்(களுக்கு) பிணைக்காப்பு, நிதிச்சொத்து மறுசீரமைப்பு, பிணைச்சொத்து பாதுகாப்பு (அமலாக்கம்) சட்டம் 2002 ன் கீழான ஏற்பாடுகள் மற்றும் பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) & 9(1) ன் கீழ், மின்னணு ஏலம் மூலம் மேற்குறிப்பிட்ட தேதி மற்றும் நேரத்திற்குள் அவரவர்களால் விரும்பப்படும் பட்சத்தில், இதன் மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகையை செலவுகள் மற்றும் கட்டணங்களுடன் திருப்பி செலுத்தி, சொத்துக்களை மீட்டுக்கொள்ளும் அறிவுறுத்தலுடன் (அவ்வாறு திருப்பி செலுத்த தவறும் பட்சத்தில்) நடத்தப்படும் ஏலம் / விற்பனை மூலம், அதிகாரப்பூர்வ அலுவலர் / ஜாமீன் பெற்று கடனளித்தவரின் அதிகார வரம்பில் பிணைக்காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(5) ல் பரிந்துரைக்கப்பட்ட ஏதேனும் முறையில் சொத்து விற்பனை செய்யப்படும் என்பதை தெரிவித்து வழங்கப்படும் (15) பதினைந்து நாட்களுக்கு குறைவில்லாது வழங்கப்பட வேண்டிய கட்டாய அறிவிப்பாகும்.

தேதி : 11.05.2024
இடம் : மும்பை

ஓம்/-
அதிகாரப்பூர்வ அலுவலர், ஓம்காரா அஸட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிட்டெட்

கனரா வங்கி Canara Bank
சிண்டிகேட் Syndicate

விற்பனை அறிவிப்பு
கடன் வசூல் மேலாண்மைக் கிளை, கோயமுத்தூர்.

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002, பிணையநலன் (அமலாக்கம்) விதிகள் 2002 ன் விதி 8(6) உடன் கீழ், அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்–ஏல விற்பனை அறிவிப்பு.

இதன் மூலம் குறிப்பாக கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் மற்றும் பொதுமக்களுக்குத் தெரிவிப்பது என்னவென்றால், கடன் வழங்கிய வங்கியால் பிணையத்திற்குள்ளான/அடுவைக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது, **கனரா வங்கி**யின் சம்பந்தப்பட்ட கிளையின், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனம் செய்து கொள்ளப்பட்டது, கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் ஆகியோரிடமிருந்து கடன் வழங்கிய வங்கிக்கு வரவேண்டிய கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிலுவைகளுக்காக **'எங்குள்ளதோ உள்ளபடி' 'என்ன உள்ளதோ அப்படியே'** மற்றும் **'என்ன நிலையில் உள்ளதோ உள்ளபடி'** என்கிற நிலையில் **26.06.2024** தேதியில், விற்பனை செய்யப்படுகிறது.

1. கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம் : M/s.ஃப்ளோரா கலர் பிரஸ், பிரதிநிதியாக அதன் பங்குதாரர்கள் : 1) திரு.F.வின்சென்ட், 2) திருமதி.D.லீலா, எண்.30, அகில்மேடு, 7வது வீதி, ஈரோடு – 638 001. **திரு.F.வின்சென்ட்,** த/பெ.பிரான்சிஸ், கதவு எண்.15, கணபதி நகர், சாவடிக்காடு தோட்டம், தண்ணீர்பந்தல்பாளையம், பெரியசேமூர், ஈரோடு – 638 004, **திருமதி.D.லீலா,** க/பெ.F.வின்சென்ட், கதவு எண்.15, கணபதி நகர், சாவடிக்காடு தோட்டம், பெரியசேமூர், ஈரோடு – 638 004, **திரு.அல்போன்ஸ் சுரேஷ் கில்டஸ்,** த/பெ.கில்டஸ், J G காட்டேஜ், மாடவிளாகம், கொல்லங்கோடு அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்–629 160. **திரு.T.R.முருகேசன்,** த/பெ.S.R.ராமசாமி, கதவு எண்.26, அண்ணா வீதி, சிவகிரி, ஈரோடு – 638 109.

02.05.2024 தேதி வரை நிலுவைத் தொகை : ரூ.1,85,90,156.20 (ரூபாய் ஒரு கோடியே எண்பத்து ஐந்து லட்சத்து தொண்ணூறு ஆயிரத்து நூற்று ஐம்பத்து ஆறு மற்றும் பைசா இருபது மட்டும்) மற்றும் வட்டி, பிற செலவுகள்.

சொத்து விபரம் : அட்டவணை A-1 : ஈரோடு பதிவு மாவட்டம், சூரம்பட்டி சார் பதிவு மாவட்டம், ஈரோடு தாலூகா, பெரியசேமூர் கிராம பழைய க.ச.எண்.75/1, இதற்கான புதிய சர்வே எண்கள் 158/1, 158/2A இதில் 158/2Aவில் அடங்கிய புன்செய் எக்டர் 0.31.0 கிஸ்தி ரூ.1.50, பழைய பொது சர்வே எண்.76, புன்செய் ஏக்கர் 2.28, கிஸ்தி ரூ.3.12, இதன் மறு சர்வே எண்.157/2ன் பகுதி இதில் தற்போது மறு சர்வே எண்.157/2வில் உள்ள புன்செய் எக்டர் 0.24.5, கிஸ்தி ரூ.0.83. ஆகிய நிலங்கள் K.A.ஷமீம் மற்றும் பழனிசாமிக்குச் சொந்தமான நிலங்களில் ஒரு வீட்டுமனைப்பிரிவு உருவாக்கப்பட்டு மா.வ/இ.ஊ.தி.கு.அங்கீகார எண்.9/2005ன்படி அங்கீகரிக்கப்பட்டது. இதிலடங்கிய மனை எண்.15 மற்றும் 16ன் எல்லைகள் வருமாறு : **மனை எண்.15ன் எல்லைகள் கீழ்வருமாறு :** 30 அடி அகல கிழமேல் ரோட்டுக்குத் தெற்கு, மனை எண்.16க்கு வடக்கு, M.ராதாகிருஷ்ணன் வாங்கிய மனை எண்.14க்குக் கிழக்கு, 30 அடி அகல தென்வடல் ஊராட்சி சாலைக்கு மேற்கு. இவற்றின் மத்தியில் தென்வடல் இருபுறமும் 35 அடி, கிழமேல் 70 அடி வடபுறம் மற்றும் கிழமேல் 66 அடி தென்புறம் ஆக உள்ள 2380 சதுர அடி காலி நிலத்தில் சாலை வளைவுக்கென 12 ½ சதுர அடி கழித்து மீதமுள்ள 2367 ½ சதுர அடி மனை நிலம் முழுவதும். **மனை எண்.16ன் எல்லைகள் வருமாறு :** மனை எண்.17க்கு வடக்கு, மனை எண்.15க்குத் தெற்கு, M.ராதாகிருஷ்ணன் மற்றும் பரிகத் அலி வாங்கிய மனை எண்கள் 14, 18க்குக் கிழக்கு, 30 அடி அகல தென்வடல் ஊராட்சி சாலைக்கு மேற்கு. இதன் மத்தியில் தென்வடல் இருபுறமும் 30 அடி, கிழமேல் 66 அடி, வடபுறம், கிழமேல் 63 ½ அடி தென்புறம் ஆக உள்ள 1942 ½ சதுர அடி மனை நிலம் முழுவதும். ஆக இரு இனங்களும் சேர்த்து மொத்தம் 4310 சதுர அடி வீட்டுமனை நிலத்துடன் லேஅவுட்டின் அனைத்து ரோடுகளின் உபயோக பொது உரிமையுடன், மொத்த நிலத்தில் தரைதளம் மற்றும் முதல் தளத்துடன் கட்டப்பட்டுள்ள RCC தார்சு கட்டிடமும், அதன் கதவுகள், சன்னல்கள் முதலியனவும் சேர்ந்த சொத்து, ஈரோடு, பெரியசேமூர், தண்ணீர்பந்தல்பாளையம், கணபதி நகர், கதவு எண்.15ல் அமைந்துள்ளது. மேற்படி சொத்து பெரியசேமூர் மூன்றாம் நிலை நகராட்சி, தற்போதைய ஈரோடு மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. தற்போதைய உட்பிரிவின்படி இச்சொத்து மறு சர்வே எண்.157/2C, 158/2Aவில் உள்ளது.

நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.1,40,53,000/– முன்வைப்புத் தொகை : ரூ.14,05,300/– ஏல உயர்வு மடங்கு : ரூ.1,00,000/–
முன்வைப்புத் தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள் : 24.06.2024 மாலை 5.00 மணிக்கு முன்னதாக.

2. கடன்தாரர்கள் மற்றும் உத்தரவாதமளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம் : M/s.செங்கோட்டப்பன் ரைஸ் மில், உரிமையாளர் : M.K.செங்கோட்டப்பன், 19, பெரியண்ணன் வீதி, பெரிய மொடச்சூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு – 638 476. **திரு.M.K.செங்கோட்டப்பன், உரிமையாளர் : M/s.செங்கோட்டப்பன் ரைஸ் மில்,** 19, பெரியண்ணன் வீதி, பெரிய மொடச்சூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு – 638 476. **திருமதி.கவிதா,** க/பெ. திரு.M.K.செங்கோட்டப்பன், 19, பெரியண்ணன் வீதி, பெரிய மொடச்சூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு – 638 476. **திருமதி.ஹேமலதா,** க/பெ.C.பாலசுப்ரமணியன், எண்.6, கிருஷ்ணன் வீதி, கோபிசெட்டிபாளையம், ஈரோடு – 638 476
30.04.2024 தேதி வரை நிலுவைத் தொகை : ரூ.6,28,78,138.19 (ரூபாய் ஆறு கோடியே இருபத்து எட்டு லட்சத்து எழுபத்து எட்டாயிரத்து நூற்று முப்பத்து எட்டு மற்றும் பைசா பத்தொன்பது மட்டும்) மற்றும் வட்டி, பிற செலவுகள்.

சொத்து விபரம் : இனம் எண். 1: 'A' அட்டவணை – ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் இணை எண்.1 சார் பதிவு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் தாலூகா, மொடச்சூர் கிராமம், இதிலமைந்த நிலங்கள், டவுன் சர்வே எண்.180 ல் 0.0047.0 ஹெக்டேர், டவுன் சர்வே எண்.198 ல் 0.0083.0 ஹெக்டேர், டவுன் சர்வே எண்.199 ல் 0.0077.0 ஹெக்டேர், டவுன் சர்வே எண்.200 ல் 0.0046.0 ஹெக்டேர், டவுன் சர்வே எண்.201 ல் 0.3740.0 ஹெக்டேர், டவுன் சர்வே எண்.202 ல் 0.0015.0 ஹெக்டேர், டவுன் சர்வே எண்.203 ல் 0.0181.0 ஹெக்டேர், டவுன் சர்வே எண்.205 ல் 0.0545.0 ஹெக்டேர், டவுன் சர்வே எண்.206 ல் 0.0045.0 ஹெக்டேர், மொத்தம் 0.4779.0 ஹெக்டேர் (பிளாக் எண்.22, வார்டு எண். C, பழைய சர்வே எண்கள் 119/1 மற்றும் 117/ A), இதன் **எல்லைகள் விபரம் :** வடக்கு – கதவு எண்.13 வீடு மற்றும் கிழமேல் ரோடு, கிழக்கு – 20 அடி அகல தென்வடல் ரோடு, தெற்கு– பெரிய மொடச்சூர் நத்தம் எண்.117A, மேற்கு – அய்யாமுத்து நாடாரின் வீடு. அங்குள்ள கதவு எண்.11, 15, 17, 19, 21 மற்றும் 23 கட்டிடங்களுடன், வரி விதிப்பு எண்கள் 20256, 20258, 20259, 20360, 20261 மற்றும் 20262, பெரியண்ணன் முதல் வீதி, கோபிசெட்டிபாளையம் நகராட்சி பழைய வார்டு எண்.16, அங்குள்ள 'செங்கோட்டப்பன் ரைஸ் மில்' உடன், 2½ எச்.பி. மின்சார மோட்டார் மற்றும் பம்ப் செட் பொருத்திய கிணற்றில் பாதி பொதுப் பங்கு, மின்சார இணைப்பு எண்கள் 40, 43, 233– பெரிய மொடச்சூர் பகிர்மானம், குடிநீர் இணைப்பு எண்.29114, பழைய சர்வே எண்.119/1 ல் மேற்குறிப்பிட்ட சொத்துக்களுக்கும் M S சதாசிவம் போர்ஷனுக்கும் இடையிலுள்ள, 20அடி அகல பொது வழியின் 15 சென்டில் 7½ சென்ட்.
'B' அட்டவணை – எண்.19, பெரியண்ணன் வீதி, பெரிய மொடச்சூர், கோபிசெட்டிபாளையம், ஈரோடு – 638 476 நிறுவன விலாசத்தில் அல்லது அவ்வப்போது மாறுதலுக்குள்ளான பிற இடங்களிலுள்ள ஆலை மற்றும் இயந்திரங்கள்.
நிர்ணயிக்கப்பட்ட விலை : ரூ.3,77,00,000/– முன்வைப்புத் தொகை : ரூ.37,70,000/– ஏல உயர்வு மடங்கு : ரூ.1,00,000/–
முன்வைப்புத் தொகை (EMD) செலுத்தக் கடைசி நாள் : 24.06.2024 மாலை 5.00 மணிக்கு முன்னதாக.

மின்-ஏலத் தேதி மற்றும் நேரம் : 26.06.2024
காலை 11.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை.
(ஒவ்வொன்றிற்கும் 5 நிமிட கால அளவிலான அளவற்ற நீட்டிப்புகளுடன் – விற்பனை நிறைவு பெறும் வரை)
சொத்தினைப் பார்வையிடும் நாள் மற்றும் நேரம் : 21.06.2024; காலை 11.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு மின்–ஏலத்தோடு தொடர்புடைய கனரா வங்கியின் இணையதளத்தின் **(www.canarabank.com)** 'லிங்க்'கில் அணுகவும். அல்லது **கனரா வங்கியின் கோயமுத்தூர், கடன் வசூல் மேலாண்மைக் கிளையின் முதன்மை மேலாளரை** எந்தவொரு வேலை நாளிலும், அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளலாம். **(போன் : 0422-2549459/2555655; மொபைல் : 7708044313) மின்னஞ்சல் : cb4712@canarabank.com**

மின் ஏலத்தின் தலைவாயில் (போர்டல்) : https://indianbankseauction.com

தேதி : 02.05.2024
இடம் : கோயமுத்தூர்

அதிகாரபூர்வ அதிகாரி
கனரா வங்கி

DINAMANI, Coimbatore Phone: 2317853; Fax: 0422-2311320 RNI Reg. No. 53675/91. Printed and Published by R.K. Jhunjhunwala on behalf of Express Publications (Madurai) Private Ltd., at Express Press, Old No.152 / New No.110, Pankaja Mill Road, Coimbatore - 641 045. ஆசிரியர்: கே. வைத்தியநாதன் - Editor: K.Vaidiyanathan Coimbatore. Vol. 35, No. 131
COPYRIGHT: Express Publications (Madurai) Private Ltd., All rights reserved. Reproduction in any manner, electronic or otherwise, in whole or in part, without prior written permission is prohibited.

epaper.dinamani.com